## முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் - 2022

---

முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆம் திகதிய எஸ்எல்-பி116 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையிலுள்ள 4 ஆம் பிரிவின் 6(ஆ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. அடிப்படை உட்கட்டமைப்பை முன்னேற்றுவதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 20,622 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 15,409 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 17,185 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 12,957 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,437 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 2,452 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூலை 07 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

#### 2.1.1 வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசனையாளர்களின் செயலாற்றல்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரலில் JICA நிதி வழங்குவதை நிறுத்தியிருந்ததுடன் அந்நேரத்தில் 11 குடிநீர் உப செயற்திட்டங்கள் மற்றும் 95 கிராமிய வீதிகள் மற்றும் நீர்ப்பாசன நிர்மாணங்களில் 77 தொடர்பான ஆலோசனை அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, ஆலோசனை நிறுவனம் எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்திருக்கவில்லை. | குடிநீர் செயற்திட்டங்களுக்கான அனைத்து உப செயற்திட்டங்கள் தொடர்பான ஆவணங்கள் 2021.04.30 இற்கு முன்னர் ஆலோசனை நிறுவனத்தால் முழுமையாக வழங்கப்பட்டிருந்தன. கிராமிய வீதிகள் மற்றும் நீர்ப்பாசன உப செயற்திட்டங்களின் இறுதிக் கட்டத்தில் வழங்கப்பட வேண்டிய 80 உப செயற்திட்டங்களில் 51 செயற்திட்டங்களுக்கான மதிப்பீடுகள் ஏற்கனவே 2022.04.30 இற்குள் கொடுக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள 27 உப செயறதிட்டங்களுக்கான மதிப்பீடுகள் 2022 செப்தெம்பர் 22 அளவில் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் மாகாண அலுவலகங்களில் மின் தடை காரணமாக AutoCAD இல் திட்டங்களை உருவாக்குவது தாமதமாகியது. | ஆலோசனை பணிகள் மற்றும் செயற்திட்டப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | எடுத்துச்செல்லக்கூடிய குடிநீர் உப செயற்திட்டங்களுக்காக ஆலோசகர் கம்பனியால் இணங்கப்பட்ட 73 உப செயற்திட்டங்களில் 39 உப செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் குறித்த கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் விரிவான வடிவமைப்பு, சாத்தியவள ஆய்வு மற்றும் பெறுகை ஆவணங்கள் உட்பட விரிவான செயற்திட்ட அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்படும் காலம் ஆகிய இரண்டும் குறைக்கப்பட வேண்டும். எனினும், ஆலோசகர் கம்பனி கிரயம் மற்றும் மனித மாதங்களைக் குறைப்பதற்கான அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்கியிருந்தமை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குடிநீர் செயற்திட்டங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை 34 ஆக உள்ள போதிலும் அசல் செயற்திட்டத் திட்டத்தின் பிரகாரம் குடிநீர் இணைப்புக்கள் வழங்கப்பட வேண்டிய சந்தாதாரர்களின் எண்ணிக்கை 120846 ஆகும். அந்த எண்ணிக்கை 89204 சந்தாதாரர்களாக குறைவடைந்துள்ளது. இது அசல் திட்டத்தை விட 26.18% வீழ்ச்சியொன்றாக உள்ளது. அந்த குறைக்கப்பட்ட வேலைத் தொகைக்காக புதிய திட்டத்தின பிரகாரம் பதவியணியினரை வேலைக்கமர்த்தும் பொருட்டு 2022 சனவரியில் இருந்து பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இறுதியாக இரு தரப்பினரும் இணங்கிய திட்டத்தை 2022 மார்ச் 01 முதல் அமுல்ப்படுத்துவதற்கு இணங்கியிருந்தனர். JICA நிதி உதவியை தற்காலிகமாக நிறுத்தியதால் ஏற்பட்ட சூழ்நிலையை கருத்தில் கொண்டு 2022 ஆகஸ்ட் 15 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவியணியினரின் வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன. | கைவிடப்பட்ட உப செயற்திட்டங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆலோசனை நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை குறைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 திசெம்பர் 31 இற்குள் எதிர்பார்க்கப்படும் பௌதீக முன்னேற்றத்தை அடைந்துகொள்ளத் தவறிய 62 உப ஒப்பந்தங்களில், 24 உப ஒப்பந்தங்களின் முன்னேற்றம் மெதுவான நிர்மாணம் காரணமாக 1 சதவீதம் - 68 சதவீதமாக இருந்தது, மேலும் JICA நிதியின் தற்காலிக இடைநிறுத்தம் காரணமாக 38 உப ஒப்பந்தங்களின் முன்னேற்றம் 0 சதவீதம் - 95 சதவீதமாக இருந்தது. | JICA நிதியை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது/ நிர்மாணம் மெதுவான முன்னேற்றத்தில் தொடர்கிறது. | இது வேலைத் திட்டத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். |

**2.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயலாளர் மற்றும் கிராமிய வீதி மற்றும் நீர்ப்பாசன ஆலோசகர் ஆகியோரிற்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பணியின் நோக்கெல்லையை விபரிக்கும் பின்னிணைப்பு அ இன் பிரகாரம் இது நடவடிக்கை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ”பணி 1.2 மூலம் மதிப்பாய்வு செய்யப்பட்ட PPS மற்றும் தொழில்தருநரின் தேவைப்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆலோசகர் கள ஆய்வின் அடிப்படையில் அளவீடு, வடிவமைத்தல், அளவு மற்றும் கிரய மதிப்பீடு மற்றும் அமுல்ப்படுத்தல் பட்டியல் என்பவற்றை உள்ளடக்கி விரிவான வடிவமைப்பை உருவாக்க வேண்டும்’’. எனினும், 37 ஒப்பந்தப் பொதிகளுக்காக அமைத்தல், குறுக்குவெட்டு ஆய்வு மற்றும் வரைபடங்களுக்காக ரூபா 31.4 மில்லியனை செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த பணிக்காக ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 19.6 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒரே சேவையை வழங்குவதற்காக இரண்டு தரப்பினருக்கு கொடுப்பனவுகள் மேற்கொளளப்பட்டிருந்தன. | ஆலோசகர் வீதி வடிவமைப்புகளுக்கான எந்தவொரு விசாரணையின் செலவையும் அவர்களின் நிதி முன்மொழிவுகளில் சேர்த்திருக்கவில்லை, ஏனெனில் அத்தகைய விசாரணை மற்றும் தரவு சேகரிப்பு சிவில் பணி ஒப்பந்தத்தில் சேர்க்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டது. | இணங்கப்பட்ட வேலையை ஆலோசகர் மூலம் மேற்கொள்ள வேண்டியதுடன் ஒப்பந்ததாரரிற்கு அதற்காக பணம் செலுத்தப்படக்கூடாது. மேலும் கணக்காய்விற்கு சரியான பதில் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | JICA கடன் வழங்குவதை நிறுத்தியிருந்ததென 2022 ஏப்ரலில் அறிந்த பின்னரும் 04 கிராமிய வீதி செயற்திட்டப் பொதிகளுக்கான ஒப்பந்தங்கள் 2022 மே மாததத்தில் வழங்கப்பட்டிருந்தன. புதிதாக | இந்த ஒப்பந்தப் பொதிகளுக்கு வேலை ஒதுக்கீட்டு முற்பணம் செலுத்தப்பட்டிருக்காததுடன் ஏற்றுக்கொள்ளும் கடிதங்கள் மாத்திரமே அனுப்பப்பட்டன. | தற்போது நடைபெற்று வரும் சிவில் பணிகளிற்கு கொடுப்பனவுகளை மேற்கொண்டு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து, கணக்காய்விற்கு |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட 03 கிராமிய வீதிகள் மற்றும் நீர்ப்பாசன ஒப்பந்த பொதிகளுக்கு வேலை ஒதுக்கீட்டு முற்பணமாக ரூபா 37,1 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது, அதே வேளை நடைபெற்று வரும் சிவில் பணிகளுக்கு பணம் செலுத்த முடிந்ததுடன் நிதி உதவி நிறுத்தப்பட்ட சூழ்நிலையில் பணிகளை பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. | | சரியான பதில் வழங்க வேண்டும். |

**2.3 மனித வளங்கள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்திற்கான முகாமைத்துவ உதவியாளராக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் 2017 இல் அமைச்சின் மேலதிக செயலாளரிற்கு (செயற்திட்டம்) நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து தனிப்பட்ட உதவியாளராக இணைக்கப்பட்டுள்ளார். செயற்திட்ட முகாமைத்துவ அலகு மூலம் மேலே குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ உதவியாளருக்கு ரூபா 1.5 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ உதவியாளர் சார்பாக JICA செயற்திட்டங்களில் அனுபவமுள்ள அமைச்சுக்கு சேவை செய்யும் உத்தியோகத்தர் ஒருவர் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ளார். | அவரது நியமனத்தை இரத்து செய்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

**2.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| முன்னேற்றமடைந்து வரும் வலயங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் பின்னிணைப்பு 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள உப செயற்திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக இலக்குகளை உள்ளடக்குவதற்கு விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள தொடர்புடைய பக்கத்தின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் பின்னிணைப்பு 16 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உப செயற்திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக இலக்குகளை உள்ளடக்கி செயற்திட்டத்தால் விபரமான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |